# ஆண்டவரே, எனக்கு விருப்பமில்லாதது ஏதாவது ஒன்றிருக்குமாயின், அது கைவிடப்படுதலேயாகும். என்னைக் கைவிடாதேயும், ஆண்டவரே




வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: பதறல்

Jeffersonville, Indiana, USA

63-09-01E

40. இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய கரத்தைக் கண்டனர். அன்றிரவு அவர்கள் இராப்போஜனத்தை (பஸ்காவை) பதறும் நிலையில் ஆசரித்தனர். ஏனெனில் ஏதோ ஒன்று நிகழவிருக்கின்றது என்று அவர்களுக்குத் தெரியும்.

நாமும் கூட ஏதோ ஒன்று நிகழப் போகின்றது என்று அறிந்திருக்கிறோம். கர்த்தருடைய வருகை சடுதியாக இருக்குமென்றும் (மணவாட்டி) இரகசியமாக எடுத்துக் கொள்ளப்படுவாள் என்றும் ஞாபகமிருக்கட்டும். அவர் இரவில் திருடன் வருகிற விதமாய் வந்து அவளைக் கொண்டு செல்வார்.

நமது குடும்பத்தின் அங்கத்தினர் திடீரென்று சென்றுவிட்டனர்; நாம் கைவிடப் பட்டோம் என்று நினைக்கும்போது! அது

நம்மை பதறச் செய்ய வேண்டும். தேவனுடைய கிருபையினால் நாம் கைவிடப்படுவதில்லை.

ஆண்டவரே, எனக்கு விருப்பமில்லாதது ஏதாவது ஒன்றிருக்குமாயின், அது கைவிடப் படுதலேயாகும். என்னைக் கைவிடாதேயும், ஆண்டவரே.

**சில நாட்கள் முன்பு, மெல்ஜான்சன் இந்தப் பாட்டை பாடுவதைக் கேட்டேன்.**

என் கண்ணீர் கீழே விழும்போது என்னை நினைவு கூரும்

**(ஆமென்)**

என் நண்பர்கள் சுற்றிலும் இல்லாத போது என்னை நினைவு கூரும்.

யோர்தான் நதியை நான் கடக்கும்போது

பட்டியலில் நீர் பெயரழைக்கும் போது என்னை நினைவு கூரும்

41. ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவ புஸ்தகத்தில் என்னுடைய பெயர் எழுதப்

பட்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். பெயரழைக்கப்படும் போது அவர் என்னை நினைவுகூர வேண்டுமென்று விரும்புகிறேன். அது நம்மில் பதறலை உண்டாக்க வேண்டும்.

"மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு..." (1 கொரி 9:27) என்று பவுல் கூறினா னல்லவா? (ஆங்கிலத்தில் Castaway அதாவது தள்ளப்பட்டு விடுபவனாய் இராதபடிக்கு என்னும் அர்த்தத்தில் எழுதப்பட்டுள்ளது – தமிழாக்கியோன்) அவ்விதமாகவும் சம்பவிக்கும்.

எனவே இத்தனை ஆண்டு காலமாக பிரசங்கம் செய்த பின்பும், அவருக்கு தவறி ழைக்கும் ஒரு நிலையை அடைவேனோ என்று சிந்தனை செய்து பார்க்கும் போது, அது என்னை பதறும் நிலையில் ஆழ்த்து கின்றது.

நான் அடுத்தபடியாக என்ன செய்ய வேண்டும்? செய்ய வேண்டியது என்னவென்று அறியாதவனாய், அது என்னை பயத்திற்குள் ளாக்குகிறது. அது என்னை மலைகளிலும்

பள்ளத்தாக்குகளிலும் எரிந்து விடுகிறது. அது மிகவும் கடினமான ஒரு நிலை. ஏனெனில் நான் ஜனங்களுடன் கூட இருக்கும்போது அவர்களில் சிலரை கிறிஸ்துவுக்காக ஆதாயப் படுத்திக் கொள்ள வேண்டுமென்று, நான் எல்லோருக்கும் எல்லாமாயிருந்து கொண்டு, அதே சமயத்தில் அந்த அடையாளத்தை எனக்கு முன்னால் நிறுத்திக் கொண்டிருக்க வேண்டியதாயுள்ளது பாருங்கள்?

★★★★★

*குறிப்பு: இந்தச் சிறு புத்தகத்திலுள்ள படம் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது. நன்றி.*